# CULTURAL HERITAGE OF TAMIL NADU

**UNIT-III**

Modern Period: Nayaks - Marathas - Poligars - Nawabs - Art and Architecture.

# நாயக்கர்கள்

தமிழக வரலாற்றில் நாயக்கர் ஆட்சிக் காலத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகிய இடங்களில் நாயக்கர்களின் ஆட்சி அமைந்தது. சமயப்பற்றும், கலையார்வமும் கொண்ட நாயக்க மன்னர்கள் கோயில் கட்டுவதிலும், அரச மாளிகைகள் அமைப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தனர். சமயப் பிணக்குகளையும், சாதிப் பிரிவினைகளையும் கட்டுக்குள் வைத்திருந்தனர். தெலுங்கு மொழி அரசவையிலும் இசையிலும் சிறப்பிடம் பெற்றிருந்த போதும், இவர்கள் காலத்தில் தமிழில் சிற்றிலக்கியங்கள் பெருகின.

**நாயக்கர் வரலாறு**

மதுரையில் பாண்டியப் பேரரசு மறைந்தபின், மதுரை டில்லி சுல்தானின் ஆட்சிக்கு உட்பட்டது. டில்லி சுல்தானின் பிரதிநிதியாய் மதுரையில் இருந்து அரசாண்ட சுல்தான், டில்லியின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி, முழுஉரிமை பெற்ற மன்னர் ஆனார். மதுரையில் முஸ்லீம் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. விஜயநகரத்தில் நாயக்கராட்சி ஏற்பட்ட பின் இரண்டாம் கம்பணர் என்ற நாயக்க அரசர், மதுரையின் மீது படையெடுத்துக் கைப்பற்றிச் சுல்தான் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தார். கம்பணருக்குப் பின் இரண்டாம் ஹரிஹரர் காலத்தில் (1377-1404) மதுரையில் முஸ்லீம் ஆட்சி அறவே அகன்று நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது.

நாயக்கர் என்ற சொல் தலைவன், படைத்தலைவன் என்ற பொருளுடையது. விஜயநகரத்தின் அரசப்பிரதிநிதியைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது. பின்னாளில் இஃது ஒரு சாதிப் பெயராக மாறிவிட்டது. நாயக்கர் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்.

**தமிழகத்தில் நாயக்கர் அரசு**

விஜயநகர நாயக்க மன்னர்கள் காலத்தில், தஞ்சை, செஞ்சி, மதுரை ஆகிய தமிழ்நாட்டு நகரங்களில், நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. தஞ்சையில்

கி.பி. 1532-இல் நாயக்கர் ஆட்சி தொடங்கியது; செஞ்சியில் கி.பி. 1526-இல் தொடங்கியது; மதுரையில் கி.பி. 1529-இல் தொடங்கியது. தொடக்க காலத்தில் இப்பகுதிகள் விஜயநகரப் பேரரசுக்கு அடங்கியிருந்து, பின்னர் முழு உரிமை பெற்ற அரசுகளாக மாறின. மதுரை நாயக்கர்களே நீண்ட காலம் அரசு செய்தவர்கள். 1529-ஆம் ஆண்டு தொடங்கி கி.பி. 1736-ஆம் ஆண்டு வரை இவர்கள் ஆட்சி நிலவியது.

**மதுரை நாயக்கர்கள்**

கம்பணர் காலத்தில் மதுரையில் நாயக்கர் ஆட்சி தொடங்கியது. எனினும் விஜயநகர அரசர் கிருஷ்ணதேவராயர் காலத்தில்தான் மதுரையில் நாயக்கர் ஆட்சி வலிவுபெற்றது. விசுவநாத நாயக்கர் கி.பி. 1529இல் மதுரை ஆட்சியை ஏற்றார். அது முதற்கொண்டு நாயக்கராட்சி மதுரையில் வளம் பெற்றது. இவரே பாளையப்பட்டு ஆட்சிமுறையை வலிவு கொண்டதாக மாற்றி அமைத்தார். 72 பாளையப்பட்டுகளின் பொறுப்பில் நாட்டின் பகுதிகள் ஆட்சி செய்ய அனுமதிக்கப் பெற்றன. பாளையக்காரர்கள் தாங்கள் ஆளும் பகுதிகளில் கிடைக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பகுதியைத் தங்கள் செலவுகளுக்கும், இன்னொரு பகுதியைப் படைவீரர்களுக்கும், மற்றொரு பகுதியை மதுரை நாயக்கர்க்கும் என ஒதுக்க வேண்டி இருந்தது. மதுரை அரசு வேண்டும் போது படையுதவி செய்ய வேண்டி இருந்தது. இதுவே பாளையப்பட்டு ஆட்சி முறையாகும். விசுவநாதருக்குப் பின் நாயக்க மன்னர் பலர் மதுரையை ஆண்டனர். அவர்களில் புகழ்மிக்கவர்கள் திருமலை நாயக்கர், சொக்கநாத நாயக்கர், இராணி மங்கம்மாள் என்ற மூவராவர்.

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களின் வம்சவழி

| ஆட்சிக் காலம் | ஆண்ட நாயக்க மன்னர்கள் |
|---|---|
| 1529 - 1564 | விசுவநாத நாயக்கர் |
| 1564 - 1572 | கிருஷ்ணப்ப நாயக்கர் I |
| 1572 - 1595 | வீரப்ப நாயக்கர் |
| 1595 - 1601 | கிருஷ்ணப்ப நாயக்கர் II |
| 1601 - 1609 | முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் (கிருஷ்ணப்ப நாயக்கரின் (II) உடன் பிறந்த சகோதரர் விசுவப்ப நாயக்கரின் மகன்) |
| 1609 - 1623 | முத்து வீரப்பர் I (முத்து கிருஷ்ணப்ப நாயக்கரின் மூத்த மகன்) |
| 1623 - 1659 | திருமலை நாயக்கர் (முத்து கிருஷ்ணப்ப நாயக்கரின் இளைய மகன்) |

| | |
|---|---|
| 1659 | முத்து வீரப்ப நாயக்கர் II |
| 1659 - 1682 | சொக்கநாத நாயக்கர் (இராணி மங்கம்மாள் கணவர்) |
| 1682 - 1689 | முத்து வீரப்பர் III |
| 1689 - 1706 | இராணி மங்கம்மாள் (சொக்கநாதரின் மனைவி) |
| 1706 - 1732 | விஜயரங்க சொக்கநாதர் (சொக்கநாதரின் மகன்) |
| 1732 - 1736 | மீனாட்சி (விஜயரங்கநாதரின் மனைவி) |

**திருமலை நாயக்கர்**

இதோ முறுக்கிய மீசையும் உருட்டி வழிக்கும் விழிகளும் கொண்ட திருமலை நாயக்கர் சிலையைக் காணுங்கள்! இது மதுரைக் கோயிலில் உள்ளது. இவர் 1623 முதல் கி.பி. 1659 வரை மதுரை நாட்டை ஆட்சி செய்த புகழ் மிக்க பெருமன்னர். தன் ஒப்பற்ற கலை ஆர்வத்தால் மதுரை நகரைக் கலையழகு கொஞ்சும் ஏதன்ஸ் நகரம் ஆக்கினார். திருமலை மன்னர் தம் முன்னோர்கள் வழியில் திருச்சியைத் தலைநகராகக் கொண்டிருந்தார். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு மதுரையைத் தலைநகராக மாற்றினார். மைசூர், திருவனந்தபுரம் ஆகிய அரசுகளை இவர் வென்றார். விஜயநகரத்தோடு போரிட்டு வென்று முழுஉரிமை படைத்த மன்னரானார். இவர் 75 ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தார். இவர் காலத்தில் மறவர் சீமை எனப்பட்ட இராமநாதபுரம், சிவகங்கை, திருவாடானைப் பகுதிகளில் அமைதி நிலவியது. சேதுபதி அரசரான இரகுநாததேவர் திருமலை மன்னருக்கு உறுதுணையாக இருந்தார்.

**சொக்கநாத நாயக்கர், இராணி மங்கம்மாள்**

நாயக்க மன்னர்களின் வரிசையில் மற்றொரு குறிப்பிடத்தக்க மன்னர் சொக்கநாத நாயக்கர். இவர் 23 ஆண்டுகள் மதுரை நாட்டை ஆண்டார். இவருக்குப் பல சோதனைகளும் தோல்விகளும் ஏற்பட்டன. செஞ்சிப் பகுதி முன்னரே பிஜப்பூர் சுல்தான் வசப்பட்டுவிட்டது. தஞ்சையும் இம்மன்னர் காலத்தில் சுல்தானால் கைப்பற்றப்பட்டது. சுல்தானின் பிரதிநிதியாக இருந்த ஏகோஜி இந்தப் பகுதிகளை அரசாண்டான். இந்த ஏகோஜி மராட்டிய சிவாஜியின் தம்பியாவான். சுல்தானின் மறைவுக்குப் பிறகு ஏகோஜி தஞ்சையில் உரிமைமிக்க மராட்டிய ஆட்சியை நிறுவினான். தமிழகத்தின் ஒரு பகுதியில் மராட்டியர் ஆட்சி ஏற்பட்டு, அதன் பண்பாட்டுக் கூறுகளும் தமிழகத்தில் பரவின. சொக்கநாதர் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது; பசியால் துன்புற்று ஆயிரக்கணக்கானவர்கள் இறந்தனர். ஏகோஜி தஞ்சையைக் கைப்பற்றுவதற்கு முன்னர், தஞ்சையை ஆண்ட விஜயராகவ

நாயக்கர், தமக்குப் பெண் கொடுக்க மறுத்தமையால் சொக்கநாதர் அவர் மீது போர் தொடுத்தார். விஜயராகவர் குடும்பத்தையே சொக்கநாதர் அழித்தார். சொக்கநாதர் இறுதிக்காலத்தில் அவருக்கு வேண்டியவர்களாலேயே சிறையில் அடைக்கப்பட்டார். பின்பு அவருடைய குதிரைப் படைத் தலைவரால் விடுவிக்கப் பெற்று மறுபடியும் நாட்டை ஆண்டார். சொக்கநாதர் அவசரபுத்தி உடையவர்; பழிவாங்கும் குணம் படைத்தவர். பிடிவாதம் கொண்டவர். எனவே அவர் காலத்தில் நாயக்கர் ஆட்சி நிலை தாழ்ந்தது.

சொக்கநாத நாயக்கரின் மனைவியே இராணி மங்கம்மாள். இவர்களின் மகன், முத்து வீரப்ப நாயக்கர் ஆட்சி செய்த போது, அவுரங்கசீப் என்ற மொகலாய மன்னர், தம் செருப்பை, நாடெங்கும் ஊர்வலமாக அனுப்பினார். அச்செருப்புக்கு எல்லாரும் மரியாதை செய்ய வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் வீரமிக்க முத்துவீரப்பர் அந்தச் செருப்பைத் தன் காலில் அணிந்து கொண்டு "உங்கள் மன்னர் இன்னொரு செருப்பை அனுப்பவில்லையா?" எனக் கேட்டார். ஏழே ஆண்டுகள் வாழ்ந்த முத்து வீரப்பர் இறந்த போது அவர் மனைவி கருவுற்றிருந்தாள். பிள்ளையைப் பெற்றுவிட்டு அவ்வரசியும் உயிர் விட்டாள். இதனால் சொக்கநாத நாயக்கரின் மனைவி மங்கம்மாள் அரசப் பொறுப்பை ஏற்றார். இராணி மங்கம்மாள் வீரமிக்கவர். அவர் தன் தளபதி நரசப்பய்யாவின் துணையால் தஞ்சை, மைசூர், திருவனந்தபுரப் படைகளை வென்றார். தம் கணவர் காலத்தில் இழந்த பகுதிகளை மீட்டார். மங்கம்மாள் செய்த அறச் செயல்கள் பலப்பல. சாலைகள், தண்ணீர்ப் பந்தல்கள், வாய்க்கால் சீரமைப்பு, சாலை ஓரம் மரம் நடுதல், அன்ன சத்திரங்கள் ஆகியன மங்கம்மாள் ஆட்சியில் சிறப்புநிலை அடைந்தன.

### நாயக்கர் கால அரசியல்

நாயக்கர் தெலுங்கு நாட்டிலிருந்து வந்திருந்தாலும் பெரும்பாலும் பழைய தமிழரசர்களின் ஆட்சிமுறையையே பின்பற்றினர். மாலிக்காபூர், குஸ்ருகான், உலூகான் என்ற இசுலாமியத் தளபதிகளின் படையெடுப்பு, கம்பணரின் படையெடுப்பு, பாண்டிய அரசர்களின் தாயாதிப்போர் ஆகியவற்றால் அமைதி இழந்த தென்னாட்டை நாயக்கர் அரசியல், அமைதி நெறிக்குத் திரும்பச் செய்தது. அரசருக்கு அடுத்தபடி தளவாய் என்ற பதவியில் இருப்பவரே அதிக அதிகாரமுடையவர். தலைமை அமைச்சர், படைத்தலைவர் என்ற இருவரின் அதிகாரமும் பெற்றவர் இவர். பெரும்பாலான தளவாய்கள் தெலுங்கு பிராமணர்களே. பிரதானி என்ற பதவி நிதியமைச்சர் பொறுப்புடையது. இவர் அரசின் வரவு செலவுகளைக் கவனிப்பவர். பிரதானிக்கு அடுத்தவர் இராயசம். இவர் அரசின் தலைமைச்

செயலாளர் ஆவார். இந்த மூவருமே அரசியல் நடத்திய முக்கிய அதிகாரிகள் ஆவர். இந்த முன்று பதவிகளும் விஜயநகர அரசமைப்பைத் தழுவியவை. என்றாலும் அமைச்சர்களின் கருத்தைக் கேட்டு நடத்தல், குடிமக்கள் தேவையை அறிந்து ஒழுகுதல் ஆகிய பண்புகள் தமிழரசர் பாரம்பரியத்துக்கே உரிய வகையில் நாயக்கர் காலத்திலும் பின்பற்றப் பட்டன. பாளையப்பட்டுகளுக்குச் சுயாட்சி உரிமை அளிக்கப்பட்டிருந்தது.

## பாளையப்பட்டு ஆட்சி முறை

மதுரை நாட்டைச் சுற்றிலும் அமைந்த பகுதிகள் 72 பாளையப்பட்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. கி.பி. 1535-இல் இந்தப் பாளையப்பட்டு முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. பாளையக்காரர்கள், தங்கள் பகுதிக்குரிய ஆட்சியை முழு உரிமையோடு செய்து வந்தனர். மத்திய அரசுக்கும் உதவினர். மதுரை நாயக்க மன்னர்களுக்குப் பாளையக்காரர்கள் உண்மை உடையோராய் இருந்தனர். சிலர் மாறுபட்டபோது போர் உண்டாயிற்று. போர்க்காலத்தில் நாயக்க மன்னருக்குப் பாளையக்காரர்கள் படைகளைக் கொடுத்து உதவினர். கி.பி. 1611-இல் நிகழ்ந்த போரில் எருமைக்கட்டிப் பாளையம் நாயக்க மன்னருக்கு 3000 காலாட்கள், 200 குதிரைகள், 50 யானைகள் தந்து உதவியதாக வைக்கோ பாதிரியார் கூறியுள்ளார். இப்படி ஒவ்வொரு பாளையமும் உதவி புரிந்ததால் மத்திய அரசு விரிவுடையதாகத் திகழ்ந்தது. பாஞ்சாலங்குறிச்சி, எட்டையபுரம், மணியாச்சி, ஊற்றுமலை, சேற்றூர், சிவகிரி, சிங்கம்பட்டி, கோட்டையூர், நிலக்கோட்டை, ஆய்குடி, போடிநாயக்கனூர், பெரியகுளம் ஆகியன சில பாளையப்பட்டுகளாகும். இப்பாளையக்காரர்களுள் சிலர் கன்னடர், சிலர் தெலுங்கர்.

## நாயக்கர் ஆட்சி நிர்வாக அமைப்பு

நாயக்கர் ஆட்சியின் தொடக்கத்தில் மதுரையே தலைநகராக இருந்தது. திருச்சிராப்பள்ளி மதுரை நாட்டின் எல்லை நகராக இருந்தது. தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றினால், தஞ்சை நாயக்கரோடு போர் புரிய வசதியாக இருக்கும் என்று கருதி கி.பி.1616-இல் முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் இம்மாற்றத்தைச் செய்தார். இவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த திருமலை நாயக்கர், தன் ஆட்சியின் ஏழாம் ஆண்டில் கி.பி.1630-இல் தலைநகரை மீண்டும் மதுரைக்கு மாற்றினார். திருச்சி அடிக்கடிப் போர்த் தாக்குதலுக்கு உட்பட்டதாலும், தென்பகுதியைத் திருச்சியிலிருந்து கவனிக்க இயலாமையாலும், திருமலை நாயக்கர் மதுரையைத் தலைநகராக்கினார். மீண்டும் 1665-இல் சொக்கநாத நாயக்கர்

தஞ்சை மீது படையெடுக்க வசதியாகத் தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றினார். இவர் மதுரையில் கட்டப்பட்ட திருமலை மகாலின் பெரும்பகுதிகளை இடித்து, அதிலிருந்த சிற்பங்களையும் சித்திர வேலைப்பாடமைந்த பகுதிகளையும் திருச்சிக்குக் கொண்டு வந்தார். மகாலை இடித்துக்கொண்டு வந்த பகுதிகளைக் கொண்டு ஏதும் கட்டவில்லை.

### சிற்றூர் ஆட்சி

தமிழகச் சிற்றூர்களின் பெயர்கள் நாயக்கர் காலத்தில் மாறி விட்டன. பாடி, சேரி, பள்ளி, சிறுகுடி, ஊர், பட்டினம், பாக்கம், குறிச்சி என்றெல்லாம் பெயர் இறுதியில் இடம்பெற்ற சொற்கள் மறைந்தன. இவற்றிற்குப் பதிலாகக் கோட்டை, மங்கலம், சமுத்திரம், புரம், குளம் போன்ற சொற்கள் ஊர்ப்பெயர்களின் பின்னால் சேர்ந்தன. எடுத்துக்காட்டாக நிலக்கோட்டை, திருமங்கலம், அம்பாசமுத்திரம், சமயபுரம், பெரியகுளம் போன்ற ஊர்ப் பெயர்களைக் குறிப்பிடலாம். சோழர் காலத்தில் கிராம ஆட்சி, கிராம சபையால் மேற்கொள்ளப்பட்டது. கிராம சபை உரிமையோடு பல செயல்களைச் செய்தது. கோயில்களைப் பாதுகாத்தது. அறநிலையங்களைப் பேணியது; மக்களுக்குக் கடன் உதவி செய்தது. விஜயநகர ஆட்சியில் கிராம ஆட்சி இந்நிலையில் இல்லை. பாளையப்பட்டு ஆட்சி முறையில் கிராம சபைகள் மறைந்தன. கிராம மணியக்காரர், கணக்கர், தலையாரி ஆகியோரைக் கொண்ட ஆயக்கார நிர்வாகம் தோற்றுவிக்கப்பட்டது. கள்ளர், மறவர் ஆகிய சாதியினர் குடியிருந்த ஊரில் வரிவசூல் செய்த அலுவலர் அம்பலக்காரர் எனப்பட்டார்; மற்ற பகுதிகளில் வரிவசூல் செய்தவர் மணியக்காரர் எனப்பட்டார். இவர்கள் வரிப்பணத்தை மாகாண அதிகாரிகளிடம் செலுத்த, அதனை அவ்வதிகாரிகள் பிரதானியிடம் செலுத்துவர். வண்ணார், தட்டார், தச்சர், கருமார் போன்ற கிராமத் தொழிலாளர்களுக்கு அரசு மானியம் வழங்கியது.

### நாயக்கர் காலச் சமயம்

நாயக்கர்கள், வழிவழி வைணவர்களாயிருந்தாலும், மற்ற சமயங்களில் வெறுப்புக் காட்டவில்லை. மதுரை மீனாட்சி கோயிலுக்கு இவர்கள் மிகுதியாகச் செலவிட்டனர். அதை ஒரு சைவக் கோயில் என்று புறக்கணிக்கவில்லை. தில்லையில் பெருமாள் திருவுருவத்தை அகற்ற வேண்டும் என்று சைவர்கள் அறப்போராட்டத்தில் இறங்கியபோது, கிருஷ்ணப்ப நாயக்கர் தளராமல் நடவடிக்கை எடுத்துப் போராட்டத்தை ஒடுக்கினார். மதுரை நாயக்கர் காலத்தில், தென்கலை, வடகலை என்ற இரு வைணவப் பிரிவுகள் தங்களுக்குள் ஓயாது சண்டையிட்டுக் கொண்டன.

நாயக்க மன்னர் இப்பிரிவுகளை வேறுபாடு கருதாமல் நடத்தினார். நாயக்கர் காலத்திலேயே, மதுரைவீரன் வழிபாடு தோன்றியது. திருமலை நாயக்கருக்குப் பின்பு, தமிழகத்தில் சக்தி வழிபாடு வலிமை பெற்றது. மீனாட்சியம்மனுக்குத் தனிச்சிறப்பு ஏற்பட்டது. மதுரையிலும், திருச்சியிலும் இசுலாமியர் அமைதியாக வாழ்ந்தனர். இசுலாமிய சுல்தான்களின் ஆட்சியில் இந்துக்கள் கொடுமைப்படுத்தப்பட்டபோதிலும், நாயக்கர் ஆட்சியில் இசுலாமியர் நன்கு பாதுகாக்கப்பட்டனர்.

நாயக்கர் காலத்தில், கிறித்துவர் சமயப் பிரசாரம் செய்யத் தடையில்லாமல் இருந்தது. பெர்னாண்டஸ் என்ற போர்த்துக்கீசியப் பாதிரியார், 1592-இல் மதுரையில் நாயக்க மன்னர் இசைவு பெற்று, முதல் மாதா கோயிலைக் கட்டினார். இராபர்ட்-டி-நொபிலி பாதிரியார், நாயக்கர் காலத்தில் பெரும் அளவில் இந்துக்களைக் கிறித்துவராக்கினார். கி.பி.1630இல் பாதிரிமார்கள் மதமாற்ற முயற்சியில் இறங்கியதற்காக மதுரையிலும் மறவர் சீமையிலும் மிகுதியும் துன்புறுத்தப்பட்டார்கள். திருமலை நாயக்கர் தலையிட்டுப் பாதிரிமார்களைக் காப்பாற்றினார்.

**மதுரை மீனாட்சி கோயில்**

இதோ, கம்பீரமான மதுரைக் கோபுரத்தைக் காணுங்கள்! தென்னிந்தியக் கட்டடக் கலைக்கும், சிற்ப ஓவியச் சிறப்புகளுக்கும், தெய்வீக அழகுக்கும் இடமான இந்தக் கோயிலின் பகுதிகளைக் காணுங்கள்! மீனாட்சி, சொக்கநாதர் சன்னதிகளில் பெரிய துவாரபாலகர் உருவங்களை திருமலை மன்னர் அமைத்தார். கொடிக்கம்பங்கள், பலிபீடங்கள் ஆகியன இவரால் அமைக்கப்பட்டன.

கோயில் ஆட்சி, அபிடேக பண்டாரம் என்பவரிடம் இருந்தது. நிர்வாகம் சீர்கேடு அடைந்த நிலையில் இருந்தது. மீனாட்சி அம்மை 'திருமலை! என்னை ஒருவரும் கவனிக்கவில்லையே' என நாயக்கர் கனவில் தோன்றிக் கூறினாராம். உடனே, மன்னர் தாமே கோயில் நிர்வாகத்தை ஏற்றுப் பல அறக்கட்டளைகளை ஏற்படுத்திக் கோயில் நிர்வாகத்தை ஒழுங்கு செய்தார்.

இதோ தருமிக்குப் பொற்கிழி அளித்த சோமசுந்தரர் திருக்கோயிலைக் காணுங்கள்! மாணிக்க மூக்குத்தி ஒளிவீசக் கிளியுடன் கொஞ்சும் எழில்மிகு மீனாட்சி அம்மையைக் காணுங்கள்! தெப்பக்குளம், ஆயிரங்கால் மண்டபம், முக்குறுணிப் பிள்ளையார், 124 சிற்பத் தூண்களைக் கொண்ட வசந்த மண்டபம் ஆகியன திருமலை மன்னரின் கோயிற்பணிகளுக்குச் சான்றுகளாகும்.

**திருவரங்கம்**

ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளிக்குப் பக்கத்தே உள்ள வைணவத் தலமாகும். இத்தலமே தமிழில் திருவரங்கம் எனப்படும். ஆழ்வார்களால் பாடப்பெற்ற இத் திருத்தலத்தில் பெருமாள் பள்ளி கொண்டிருக்கிறார்.

ஏன் பள்ளி கொண்டீர் ஸ்ரீரங்க நாதரே? என்ற பாட்டு இறைவனை எண்ணித் துதிப்பார்க்கு இன்பம் தருவதாகும். திருமலை நாயக்கர், சொக்கநாத நாயக்கர், இராணி மங்கம்மாள், விஜயரங்க சொக்கநாதர் எனப் பலரும் திருவரங்கம் திருக்கோயிலுக்குப் பணி செய்துள்ளனர். நாயக்க மன்னர்களின் தலைநகரமாகத் திருச்சிராப்பள்ளி விளங்கியமையால், அதன் பக்கத்தில் இருந்த திருவரங்கம் அவர்களின் வழிபாட்டுத் தலமாக விளங்கியது. பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாளின் வரலாற்றை, விஜயநகர வேந்தரான கிருஷ்ண தேவராயர் ஆமுக்தமாலியதா என்ற தெலுங்கு நூலாகப் படைத்துள்ளார். இன்றும் திருவரங்கத் திருக்கோயிலில், விஜயரங்க சொக்கநாதர் மற்றும் அவருடைய மனைவி மீனாட்சி திருவுருவங்கள் உள்ளன.

**கிறித்துவ சமயம்**

நாயக்கர் காலத்தில் கிறித்துவ சமயம் நன்கு பரவியது. கடற்கரை ஓரப் பகுதிகளில் டச்சுக்காரரும், போர்த்துக்கீசியரும், ஆங்கிலேயரும் ஆதிக்கம் செலுத்தியதை நாயக்க மன்னர்கள் தடுக்கவில்லை. இராபர்ட் டி நொபிலி பாதிரியாரும், வேறு சில பாதிரியார்களும், மதமாற்றம் செய்ததற்காகத் திருச்சிராப்பள்ளியில் சிறையில் அடைக்கப்பட்டனர்; துன்புறுத்தப்பட்டனர். அப்போது, திருமலை மன்னர் தலையிட்டுப் பாதிரியார்களைக் காப்பாற்றினார். மதமாற்றம் செய்வதைத் தடுக்கக்கூடாது என்றும் கட்டளையிட்டார். பாதிரிமார்களுக்குப் பரிசுப் பொருட்களை அளித்தார். சொக்கநாத நாயக்கர் காலத்திலும், இந்த ஆதரவு நீடித்தது. மாறாக மறவர் சீமையில் பிரிட்டோ பாதிரியார் கொடுமையாகத் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்பட்டார். மதுரையை விட்டுக் கிறித்துவர்களை வெளியேற்ற வேண்டுமென்று, இராணி மங்கம்மாளுக்குத் தஞ்சை அரசர் கடிதம் எழுதினார். அதற்கு மங்கம்மாள் “எப்படிச் சிலரை அரிசிச் சோறு உண்ணவும், வேறு சிலரை இறைச்சி தின்னவும் விடுகிறோமோ, அப்படி ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் மதத்தை ஏற்றுக்கொண்டு வாழ விடுவதே அறமாகும்” என்று பதில் எழுதினார். நாயக்கர் காலத்தில் கிறித்துவ சமயம் மற்ற சமயங்களைப் போன்றே சமநிலையில் நோக்கப் பெற்றது.

## நாயக்கர் காலக் கலை வளர்ச்சி

நாயக்க மன்னர்கள், கலைகளில் ஈடுபாடு உள்ளவர்கள். தமிழ்நாட்டுக்கு அவர்களால் அருமையான கட்டடங்களும், சிற்பங்களும், ஓவியங்களும் கிடைத்தன. மிகப்பெரிய கோயில் மண்டபங்களும், துவாரபாலகர் சிலைகளும் இவர்களால் உருவாக்கப்பட்டன. தமிழகத்தில் திருமலை நாயக்கர் காலத்தில் 64 கோயில்களில் கோபுரங்கள் எழுப்ப முயன்று பணக்குறையாலோ வேறு காரணத்தாலோ திருப்பணிகள் நின்றுவிட்டன. மதுரை இராய கோபுரமும் அவற்றில் ஒன்றாகும். ஒரு சமயம் கல்லில் உருவம் செதுக்கிக் கொண்டிருந்த சிற்பி, தன் உதவியாளரிடம் வெற்றிலைச் சுருளுக்குக் கை நீட்டினான்.

உதவியாள் எங்கோ போயிருந்தான். சிற்பத்தைப் பார்த்துக் கொண்டே பின்புறம் கையை நீட்டியபடி வெற்றிலை பாக்குக் கேட்டதை, அங்கு வந்த மன்னர் திருமலை கண்டு அவரே வெற்றிலைச் சுருள் மடித்துக் கொடுத்தார். அரசரே தனக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்ததை அறிந்த சிற்பி, தன் விரல்களை வெட்டிக்கொண்டான். மன்னர் அவ்விரல்களுக்கு மாற்றாகப் பொன்னால் விரல்கள் செய்து அளித்தார். இஃது உண்மையோ கதையோ, மன்னரின் கலை ஆர்வத்தை வெளிப்படுத்துவதாக இச்செய்தி விளங்கக் காணலாம். மீனாட்சி கோயிலில் உள்ள பிட்சாடனர் சிலை, மோகினி வடிவம், காளியின் நடனம், சிவனின் ஊர்த்துவ தாண்டவச்சிலை போன்றவற்றை வேறு எங்கும் காண இயலாது. ஆயிரங்கால் மண்டபத்தில் இருக்கும் அரிச்சந்திரன், குறவன், குறத்தி சிலைகள் அற்புதமானவை.

கலைகள் வளர்ந்தன. கட்டடம், சிற்பம், ஓவியம், இசை ஆகிய கலைகளில் பலர் வல்லவராய் இருந்தனர். தெலுங்கு இசை, நாட்டில் பரவியது. தெலுங்குப் பண்பாட்டுக் கூறுகள் தமிழர்க்கு அறிமுகமாயின. கோயில்கள், பண்பாட்டின் கருவூலங்களாகத் திகழ்ந்தன. நாயக்கர் காலச் சிற்பங்கள், திராவிடச் சிற்ப இலக்கணம் பொருந்தியவை. இவை அளவில் பெரியன. மிக நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்டவை.

## திருமலை நாயக்கர் மகால்

ஓ! எவ்வளவு பெரிய மகால் என்று பார்த்து அதிசயப்படுகின்றீர்களா? வேண்டாம்! திருமலை மன்னர் கட்டியதில் நான்கில் ஒருபகுதிதான் இப்போது உள்ளது. எஞ்சிய பகுதிகள் இடிக்கப்பட்டுவிட்டன. இது இத்தாலிய நாட்டுச் சிற்பியால் வரைபடம் வரைந்து அமைக்கப்பட்டது. இதோ இந்த மகாலில் இன்று எஞ்சியுள்ள சொர்க்க விலாசம் என்ற பகுதியைப் பாருங்கள்! 40 அடி உயரமுள்ள வழுவழுப்பான சுதைத்தூண்கள்

தாங்கும் மண்டபத்தைக் காணுங்கள். இதுதான் அரசர் அரியணையில் இருந்து ஆட்சி செய்த இடம். இரண்டு குதிரைச் சிற்பங்கள் அழகு செய்யும் படிகளைக் கடந்து இந்த இடத்தை அடையலாம். ஆண்டுதோறும் அங்கயற்கண்ணி அம்மையிடம் செங்கோலைப் பெற்றுவந்து மன்னர், இந்த மண்டபத்தில் உள்ள அரியணையில் அமர்வது வழக்கம். நவராத்திரி விழாவின்போது, ஒன்பது நாள்களிலும் இந்தச் சொர்க்க விலாசத்தில் மன்னர் கொலு இருப்பார். பழுதடைந்த இந்தப் பளிங்கு வண்ண மாளிகையை கி.பி. 1868இல் நேப்பியர் பிரபு, மூன்று இலட்ச ரூபாய் செலவு செய்து பாதுகாத்தார்.

### இலக்கியம்

நாயக்கர்கள் காலத்தில் சிற்றிலக்கியங்கள் பெருகின. திருமலை மன்னர், தெலுங்கையே ஆதரித்தார். எனினும் இவருடைய அவையில் குமரகுருபரர் பாடிய போது, மீனாட்சியம்மையே குழந்தை வடிவாக வந்து கேட்டதாக ஒரு கதை உண்டு. குமரகுருபரர் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம் ஆகிய இரு நூல்களை மீனாட்சியின் மீது பாடினார். அதிவீரராம பாண்டியர், வரதுங்கராம பாண்டியர் என்ற சிற்றரசச் சகோதரர்கள், திருக்குருகைப்பெருமாள் கவிராயர், இராபர்ட் டி நொபிலி பாதிரியார், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், சுப்பிரதீபக் கவிராயர், வீரமாமுனிவர், உமறுப்புலவர், திரிகூடராசப்பக் கவிராயர் ஆகியோர் நாயக்கர் காலத்தில் வாழ்ந்து இலக்கியம் படைத்த புலவர்களாவர்.

### நாயக்கர் கால வாழ்க்கை முறை

சாதிப் பெருக்கம், பலதார மணம் (Polygamy), சமய மாற்றம், சமய, அரசியல் சார்புடைய விழாக்கள் ஆகியவை நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் மக்கள் வாழ்க்கை முறையில் காணும் சிறப்பு நிகழ்வுகளாகும்.

### சாதிப் பிரிவுகள்

நாயக்கர் காலத்தில் வலங்கைச் சாதிகள், இடங்கைச் சாதிகள் என்று இரு பிரிவுகளாகச் சாதிகள் பிரிந்து பூசல் விளைவித்தன. எனினும் நாயக்க மன்னர்கள் இவற்றை வளரவிடவில்லை. நாயக்கர்கள் தெலுங்கு நாட்டிலிருந்து இக்காலத்தில் தமிழகம் வந்து குடியேறினர். கம்மவார், ரெட்டியார், நாயக்கர், தேவாங்கர், கோமுட்டி, சாலியர், நாவிதர், சக்கிலியர், வண்ணார், ஒட்டர், பிராமணர் ஆகியோர் தமிழ்நாட்டுக்கு வெளியே இருந்து

வந்து இங்குக் குடியேறினர். இக்குடியேற்றங்கள் தமிழர்களால் எதிர்க்கப் படவில்லை.

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் சௌராட்டிரப் பகுதியிலிருந்து சௌராட்டிரர்கள் தமிழகத்தில் குடியேறினர். இவர்களைப் பட்டுநூல்காரர் எனத் தமிழர் குறிப்பிட்டனர். இவர்கள், மங்கம்மாள் காலத்தில், பிராமணரைப்போலத் தமக்கும் பூணூல் போட்டுக் கொள்ளும் உரிமை வேண்டிப் பெற்றனர் என்பர்.

**ஆடவர் மகளிர் நிலை**

ஆண்மக்கள், பெண்களைவிடக் கல்வியில் மேலோங்கி இருந்தனர். மகளிர் உரிமைக்காகப் போராடவில்லை. ஆடவர், மகளிர் பலரை மணந்தனர். திருமலை மன்னருக்கு 200 மனைவியரும், மறவர் நாட்டை ஆண்ட கிழவன் சேதுபதிக்கு 47 மனைவியரும் இருந்தனர். கணவன் இறந்ததால் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கம் சில இடங்களில் இருந்தது. இராணி மங்கம்மாள் அறிவும் துணிவும் மிக்க மங்கையாகத் திகழ்ந்தார். அவருக்குப் பின்னால் ஆட்சிக்கு வந்த இராணி மீனாட்சிக்கு அத்தகைய ஆற்றல் இல்லை. ஆடவர் மகளிர் ஆகிய இருபாலாரும் சமயம் மாறுகின்ற வழக்கம் இக்காலத்தில் ஏற்பட்டது.

கலை ஈடுபாடு மிகுந்திருந்த இக்காலத்தில், பெருஞ்செல்வர்களும், உயர் அதிகாரிகளும், மகளிர் பலரை மணக்கும் வழக்கம் இருந்தது. மகளிர் பலர் இசை, நடனம் முதலான கலைகளில் சிறந்து விளங்கினர்.

கோயிலுக்குப் பொட்டுக்கட்டும் வழக்கம் என்ற பெயரில் பெண்களைத் தாழ்குடிப் பெற்றோர் கோயிற் பணிக்காக விட்டனர். ஆனால் உயர்குடிச் செல்வர் இம்மகளிரைத் தம் உடல் வேட்கைக்கு ஆளாக்கிக் கொண்டனர்.

**கல்வி**

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பிள்ளைகள் படிக்கும் வழக்கம் இருந்தது. அரசாங்கங்கள், கல்விக்கூடங்களை வளர்க்கவில்லை. பிராமணர்கள் வேதபாடசாலைகளில் சேர்ந்து வேதம் பயின்றனர் என்றும், இவர்களுக்குரிய செலவை அரசு ஏற்றிருந்ததென்றும் நொபிலி பாதிரியார் தெரிவிக்கின்றார். மடங்கள் சமயக் கல்வியைக் கற்பித்தன. பெண்கல்வி மிகுதியாக வளரவில்லை.

**திருவிழாக்கள்**

திருமலை நாயக்கர் காலத்தில் மதுரை விழாக்களின் இருப்பிடம் ஆயிற்று. ஆண்டுதோறும் நான்கு பெருவிழாக்கள் நடந்தன.

திருமலை மன்னர், மாசி மாதத்தில் நிகழ்ந்து வந்த திருக்கலியாண விழாவையும், தேரோட்டத்தையும் மக்கள் கலந்து கொள்ள வசதியாகச் சித்திரை மாதத்திற்கு மாற்றினார். இந்தத் திருவிழாவில், எட்டாம் நாளில் மீனாட்சி அம்மைக்கு முடிசூட்டி, அவரிடமிருந்து மன்னர் செங்கோல் வாங்கும் நிகழ்ச்சி சேர்க்கப்பட்டது. இதுவே மதுரையில் பெரிய திருவிழா ஆகும்.

வைகாசி மாதத்தில் வசந்த விழா நடத்தப் பெற்றது. ஆவணி மாதத்தில் பத்து நாட்கள் சிவபெருமானின் திருவிளையாடல் நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன. பத்து நாள் நிகழ்ச்சிகளில் ஒன்று, இறைவன் விறகு விற்ற நிகழ்ச்சியாகும். இதோ அந்தத் திருவிளையாடலைக் காணுங்கள்! இறைவன் விறகு விற்பவனாக வந்து பாட்டுப்பாடி இறுமாப்பு கொண்டிருந்த இசைப்பாடகர் ஏமநாதனைத் தோல்வியுறச் செய்து, பாண்டிய மன்னனின் அவைக்களப் பாடகன் ஆகிய பாணபத்திரனுக்கு அருள் செய்த இதனை, யார் மறக்க முடியும்? புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழா நடைபெற்றது.

இவற்றைத் தவிர, வேறு பல திருவிழாக்களும் நிகழ்ந்தன. அவற்றில் தெப்பத்திருவிழா தைப்பூச நாளன்று நடத்தப் பெற்றது.

இசுலாமிய மரபினரிடமிருந்து, நாயக்கர், தமிழக ஆட்சியைக் கைப்பற்றினர். தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட இவர்களின் ஆட்சியில் தமிழ் வளரவில்லை. எனினும், தமிழரும் அயலவரும் பூசலின்றி வாழ்ந்தனர். கலைகள் செழித்தன. சமயங்கள் சமரச உணர்வு பூண்டிருந்தன. கோயில்கள் சிறப்புப் பெற்றன. பொதுநிலையில் நாயக்கர் காலத்தில் தமிழர் பண்பாடு நலிவு அடையவில்லை எனலாம்.

# மராட்டியர்

தஞ்சையை ஆட்சி புரிந்துவந்த விசயராகவ நாயக்கருக்கும் (கி.பி.1631-1675) மதுரையை ஆட்சி புரிந்துவந்த சொக்கநாத நாயக்கருக்கும் (கி.பி.1659-1682) பகைமை இருந்துவந்தது. ஒரு சமயம் சொக்கநாத நாயக்கர், விசயராகவ நாயக்கரின் மகளைத் தமக்கு மணம் முடித்துத் தருமாறு கேட்டார். ஆனால் விசயராகவ நாயக்கர் தம் மகளைத் தர மறுத்துவிட்டார். எனவே சொக்கநாத நாயக்கர் கி.பி.1673இல் தஞ்சையின் மீது போர் தொடுத்தார். விசயராகவ நாயக்கரால் மதுரைப் படையை வெல்லமுடியவில்லை. எனவே அந்தப்புரத்தை வெடிவைத்துத் தகர்க்குமாறு சொல்லி விட்டுப் போரைத் தொடர்ந்து செய்தார். இறுதிவரை அவர் பணியவில்லை. தம் மகளுடன் உயிர் நீத்தார். எனினும் விசயராகவருடைய மாதேவியருள் ஒருவர் தன் மகன் செங்கமலதாசு என்னும் சிறுவனை ஒரு தாதியிடம் கொடுத்துத் தப்பி ஓடுமாறு செய்தார். செங்கமலதாசு நாகப்பட்டினத்தில் ஒரு வாணிகனிடத்தில் வளர்ந்து வரலானான்.

தஞ்சை நாயக்கர் இறந்ததும், மதுரைச் சொக்கநாத நாயக்கர் தனது சிற்றன்னை மகனும், தனது தம்பியுமாகிய அழகிரி நாயக்கர் என்பவரைத் தம்முடைய சார்பாகத் தஞ்சையிலிருந்து ஆட்சி செய்து வருமாறு அனுப்பினார். சில ஆண்டுகள் மதுரைக்கு அடங்கி ஆண்டுவந்த அழகிரி நாயக்கர், தாமே சுயேச்சையாகத் தஞ்சையை ஆளத் தொடங்கினார். விசயராகவ நாயக்கரிடம் பணிசெய்த வெங்கண்ணா என்பவர் அழகிரி நாயக்கருக்கும் இராயசமாய் (செயலாளராய்) இருந்து வந்தார். இவர் தஞ்சையைச் சுயேச்சையாக ஆளத் தொடங்கிய அழகிரி நாயக்கருக்கு ஆதரவாக இருந்தார். இதற்குக் கைம்மாறாக அழகிரி நாயக்கரின் புதிய ஆட்சியில் தமக்கு மேலான அமைச்சர் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் அப்படிப்பட்ட பதவி கிடைக்கப் பெறவில்லை. எனவே வெங்கண்ணா வெறுப்படைந்து அழகிரி நாயக்கரை ஒழித்துக்கட்ட முடிவு செய்தார்.

விசயராகவ நாயக்கரின் மகன் செங்கமலதாசு நாகப்பட்டினத்தில் வளர்ந்து வருவதை வெங்கண்ணா அறிந்தார். அழகிரி நாயக்கரை நீக்கிவிட்டுச் செங்கமலதாசைத் தஞ்சை அரசனாக ஆக்க நினைத்தார். நாகப்பட்டினம் சென்று, அங்கிருந்து செங்கமலதாசை அழைத்துக் கொண்டு பீஜப்பூரை ஆண்டு வந்த சுல்தான் அடில்ஷா என்பவனிடம் சென்றார். (பீஜப்பூர் கர்நாடக மாநிலத்தில் பெங்களூருக்கு வடமேற்கே 530கி.மீ தொலைவில் உள்ளது.) ‘செங்கமலதாசு முந்தைய தஞ்சை நாயக்கரின்

மகனாவான்; இவனைத் தஞ்சை அரசனாக்க வேண்டும்' என்று அவனிடம் வேண்டினார். பீஜப்பூர் சுல்தான் செங்கமலதாசை அரசனாக்க ஒப்புக் கொண்டான். அவன் தன்னுடைய படைத்தலைவர் ஏகோஜி என்பவரைப் படை ஒன்றுடன் அனுப்பி வைத்தான்.

பீஜப்பூர் சுல்தானின் பெரும்படைக்குத் தலைமை தாங்கிய ஏகோஜி தஞ்சை நோக்கி வந்தார். இதை அறிந்த அழகிரி நாயக்கர் சொக்கநாதரின் உதவியை நாடினார். அவரது முந்தைய துரோகச் செயல் காரணமாகச் சொக்கநாதர் அவருக்கு உதவி செய்ய மறுத்துவிட்டார். தஞ்சைக்கு அருகில் உள்ள அய்யம்பேட்டை என்னும் இடத்தில் நடந்தபோரில் அழகிரி நாயக்கரை ஏகோஜி தோற்கடித்தார். போரில் வெற்றி பெற்ற ஏகோஜி செங்கமலதாசைத் தஞ்சைக்கு அரசன் ஆக்கினார். பின்பு தனது படைகளின் செலவுக்காகப் பெருந்தொகை ஒன்றை அவனிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டு கும்பகோணத்தில் சென்று தங்கினார்.

செங்கமலதாசு தன்னை அரசனாக்கப் பாடுபட்ட வெங்கண்ணாவைப் புறக்கணித்து, நாகப்பட்டினத்தில் தனக்கு ஆதரவளித்த வணிகக் குடும்பத்தாரை அமைச்சராகவும் படைத்தலைவராகவும் ஆக்கினான். இதனால் ஏமாற்றம் அடைந்த வெங்கண்ணா செங்கமலதாசுக்குப் பாடம் கற்பிக்க நினைத்து, கும்பகோணத்தில் இருந்த ஏகோஜியிடம் சென்று தஞ்சையைக் கைப்பற்றி அதன் ஆட்சிப் பீடத்தில் ஏறுமாறு அவரை வேண்டினார். ஏகோஜி பீஜப்பூர் சுல்தானுக்கு அஞ்சி முதலில் மறுத்தார். பின்பு சில நாட்கள் கழித்து, பீஜப்பூர் சுல்தான் இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு அச்சம் தெளிந்தார். வெங்கண்ணாவின் ஒத்துழைப்போடு சென்று செங்கமலதாசை வென்று தஞ்சையைக் கைப்பற்றி அதன் அரியணையில் ஏறி அமர்ந்தார். இது கி.பி. 1676இல் நிகழ்ந்தது. இவ்வாறாகத் தஞ்சையில் மராட்டிய அரசினை ஏகோஜி தொடக்கி வைத்தார்.

தஞ்சாவூரில் மராட்டிய மன்னர்களால் தொடங்கப்பட்ட சரசுவதிமகால் நூலகத்தில் இரண்டாம் சரபோஜியும், ஸ்வார்ட்ஸ் பாதிரியாரும் வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய பல்வேறு மொழிகளில் இலக்கியம், இசை, மருத்துவம் போன்ற துறைகளைச் சார்ந்த ஓலைச்சுவடிகள், அச்சில் இடப்பட்ட நூல்கள் ஆகியவற்றை இடம்பெறச் செய்தனர். மேலும் இரண்டாம் சரபோஜி உலகின் பல்வேறு பாகங்களில் இருந்து ஏறத்தாழ 4000 புத்தகங்களை வாங்கிச் சரசுவதி மகால் நூலகத்தில் இடம்பெறச் செய்தார்.

இரண்டாம் சரபோஜி தமிழ்ப் புலவர்கள் பலரைத் தம் அவையில் உரிய சிறப்புகள் செய்து ஆதரித்தார். கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் இவருடைய அவையில் தலைமைப் புலவராக வீற்றிருந்தார். இப்புலவர் பெருமான் இரண்டாம் சரபோஜி மீது சரபேந்திர பூபாலக் குறவஞ்சி என்னும் நூலைப் பாடியுள்ளார். தமிழில் உள்ள குறவஞ்சி நூல்களில் திரிகூடராசப்பக் கவிராயர் எழுதிய திருக்குற்றாலக் குறவஞ்சிக்கு அடுத்தபடியாக, சிறந்து விளங்குவது சரபேந்திர பூபாலக் குறவஞ்சியாகும்.

தஞ்சை மராட்டிய மன்னர் ஆட்சி புரிந்த நாடு பெரும்பாலும் இன்றைய தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது. இவர்களின் நாட்டுக்குக் கொள்ளிடம் ஆறு வடக்கு எல்லையாக அமைந்தது; வங்காள விரிகுடாக் கடல் கிழக்கு எல்லையாக அமைந்தது; மேற்கே திருச்சி, புதுக்கோட்டை அரசுகளும், தெற்கே இராமநாதபுர அரசும் எல்லைகளாக அமைந்தன.

**உழவர்கள் நிலை**

கி.பி.1683 ஆம் ஆண்டு பிரிட்டோ பாதிரியார் எழுதிய கடிதம் ஒன்றில் ஏகோஜி நிலவரி வசூல் செய்த முறை பற்றிக் கூறப்படுகிறது. நில வருவாயில் ஐந்தில் நான்கு பங்கு வரியாக விதிக்கப்பட்டது என்றும், தன் விருப்பம் போல் விளைபொருள்களின் விலையை நிச்சயித்து அதை நாணயமாகச் செலுத்த வேண்டுமென்று ஏகோஜி வற்புறுத்துகின்றார் என்றும், நிலத்தின் முழு விளைச்சலையும் விற்றால் கூட நிலவரியைச் செலுத்த முடியாமல் மக்கள் தவித்தனர் என்றும், நிலவரி கொடுக்க முடியாதவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர் என்றும் அவர் கடிதத்தில் கூறப்படுகிறது. பிற மராட்டிய அரசர்களும் குடியானவர்களைக் கசக்கிப் பிழிந்து வரி வாங்கினர் என்று செவல் (Sewell) என்பவர் கூறுகின்றார்.

மேலே கூறப்பட்ட கருத்துகளை மெக்கன்சி என்பவர் மறுக்கின்றார். உழவர்கள் ஏகோஜியால் பெற்ற சிறப்புகள் முதலாம் சரபோஜியின் செப்பேடு ஒன்றினால் அறியப்படுகின்றன என்று அவர் கூறுகின்றார்.

பல செப்பேடுகள் குடியானவர் செய்த பல்வேறு அறச்செயல்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. பல ஊர்களில் குடியானவர்களும், வணிகர்களும், அந்தணர்களும், அரசு அலுவலர்களும் இணைந்து அறக் கொடைகள் பல தந்துள்ளனர். உழவர்கள் தங்களுக்குள் மகமை வைத்து ஆலயப்பணி

செய்திருக்கின்றனர். பொதுவாக எல்லா மராட்டியச் செப்பேடுகளும் பொதுமக்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்து அறச்செயல்கள் செய்தமையையே கூறுகின்றன. எனவே மிகவும் கொடுமையான வரி, அதனைக் கசக்கிப் பிழிந்து வசூலித்தனர் என்ற கருத்துப் பொருந்தாது.

**நில அளவு முறை**

மராட்டியர் ஆட்சிக் காலத்தில் நிலங்கள் அளக்கப்பட்டன. நில அளவுக்குப் பல கோல்கள் பயன்படுத்தப்பட்டன. ஏகோஜியின் காலத்தில் 24 அடிக்கோலும், பிரதாப் சிங் காலத்தில் சோழ நாட்டின் மேற்குப் பகுதியில் (திருக்காட்டுப் பள்ளிச்சீமை) 14 அடிக்கோலும், சோழ நாட்டின் கிழக்குப் பகுதியில் (சீர்காழிச் சீமை) 21 அடிக்கோலும் பயன்படுத்தப்பட்டன.

கொடையாகக் கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு நாற்பக்க எல்லைகளும் சரியாகக் கூறப்பட்டன. பொதுவாக நிலம் மா, குழி, வேலி எனக் கணக்கிடப் பெற்றது.

**வாணிகம்**

மராட்டியர் ஆட்சிக் காலத்தில் வாணிகம் மிகவும் செழிப்பாக நடைபெற்று வந்தது. உள்நாட்டு வணிகர்களுடன் பிரெஞ்சு, போர்ச்சுக்கீசிய, டச்சு, இங்கிலாந்து நாடுகளின் வாணிகக் குழுக்களைச் சேர்ந்த வணிகர்களும் சோழ நாட்டுப் பகுதிகளில் வாணிகம் செய்து வந்தனர். வெளிநாட்டு வணிகர்கள் கடற்கரைகளில் தொழிற் சாலைகளையும், சேமிப்புக் கிடங்குகளையும் கட்டிக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக உள்நாட்டுக்குள் பொருள்களைக் கொண்டு வந்து விற்றனர்; உள்நாட்டுப் பொருள்களை வாங்கினர். அவர்களுக்குப் பல வணிகச் சலுகைகளும் அளிக்கப்பட்டன. முதலில் குத்தகைக்கு ஊர்களைப் பெற்ற வெளிநாட்டினர் பின்னர், தமிழக அரசியலில் ஈடுபட்டு இலவசமாகவும் ஊர்களைப் பெறத் தொடங்கினர்.

உள்நாட்டில் இருந்த உழவு சாராத மற்றத் தொழிலாளிகளும், வணிகர்களும் பலபட்டடை செட்டியள் வர்த்தகர் என்றும், பதினெட்டுப் பட்டடை வர்த்தகர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். பொருட்களை மொத்தமாகக் கொண்டு வந்து பலர் விற்கும் இடங்களைப் பேட்டை என்றனர். அரிசிப்பேட்டை, ஆட்டுப்பேட்டை என்றெல்லாம் பல பேட்டைகள் இருந்தன. அரிசிப்பேட்டையில் அரிசி விற்கும் வணிகர் பலரும், ஆட்டுப்பேட்டையில் ஆடு விற்கும் வணிகர் பலரும் இருந்தனர். தனித்தனியாகப் பொருட்கள் விற்கும் இடங்களைக் கடை என்றும்

(அரிசிக்கடை, ஜவுளிக்கடை, தேங்காய்க் கடை, நெல்லுக் கடை, கசாப்புக் கடை, காசுக்கடை, கறிகாய்க் கடை, சாராயக்கடை) அழைத்துள்ளனர்.

ஒரே கடையில் பல்வேறு பொருட்களையும் விற்கும் இன்றைய மளிகைக்கடை போன்ற கடைகளும் அன்று இருந்தன. அவை சரக்குக்கடை, பல சரக்குக்கடை, சில்லறைக்கடை, மூலமளியக்கடை எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பெற்றன.

அரிசி, நெல், தானியம், பயறு முதலிய பொருட்கள் விற்பனை நிலையங்களுக்குப் பொதி, சுமை என்ற அளவுகளில் கொண்டு வரப்பட்டன. விற்பனை நிலையங்களில் அப்பொருள்கள் கலம், குறுணி, கண்டி, சேர், படி, நாழி, உரி, தூணி, மா போன்ற பல்வேறு அளவுகளில் அளந்து விற்கப்பட்டன. நிறுக்கக் கூடிய பொருட்கள் மனு, துலாம் என்ற அளவுகளில் நிறுக்கப்பெற்றன. நெய் தோண்டி என்றும், வெற்றிலை கட்டு என்றும், எண்ணெய் குடம், காணம், சேர் என்றும் பல்வேறு அளவுகளில் விற்கப்பட்டன.

மூன்றேகால் சேர் கொண்டது ஒரு படி என்ற அளவு முறை இருந்துள்ளது. பொருட்கள் கடைகளில் விற்கப்பட்டது மட்டுமின்றி, உள்ளூரிலும் கொண்டு போய் விற்கப்பட்டன. அன்றிருந்த பல்வேறு வணிகர்கள் பெயர்களையும் செப்பேடுகள் மூலம் அறிகின்றோம்.

**நாணய முறை**

தஞ்சை மராட்டியர் கால நாணயம் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. ஆனால் செப்பேடுகளில் நாணயங்கள் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன. பணம், பொன், வராகன், ராசகோபாலச் சக்கரம், காசு என்ற பல குறியீடுகளைச் செப்பேடுகளில் காண முடிகிறது.

ஒரு செப்பேட்டில் பொன் (துளைப்பொன்) என்று குறிக்கப்பெறுகிறது. அஃது உயர்ந்த பொன்னாக இருக்கலாம். கால் பணம், அரைப்பணம் என்ற வழக்கம் இருந்துள்ளது.

10 பணம் கொண்டது 1 பொன் என அழைக்கப்பட்டது. பொன்னும் ராசகோபாலச் சக்கரமும் சமமான மதிப்புக் கொண்டது காசாகும்.

நாணயம் உருவாக்கும் இடம் கம்பட்டம் எனப்பட்டது. நாகப்பட்டினத்தில் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும், ஏகோஜியும் சேர்ந்து ஒரு கம்பட்டத்தில் கூட்டாகக் காசுகள் அடித்தனர். அக்காசு தங்கக் காசு ஆகும். தஞ்சாவூர்ச் சீமைக்காக மூன்றரை மாத்து உள்ள பணமும்,

பவழக்காடு சீமைக்காக எட்டரையே அரைக்கால் மாத்து உள்ள வராகனும் அடிக்கப்பட்டன. அக்கம்பட்டங்கள் முறையே பணக் கம்பட்டம், வராகன் கம்பட்டம் எனத் தனித் தனியாகப் பெயர் கொடுத்து அழைக்கப்பட்டன. இந்த வராகன், விராகன் என்ற பெயராலும் குறிக்கப்படுகிறது.

இந்த நாணயங்கள் அடிக்கிற கம்பட்டத்தில் வருகின்ற வருவாயில் டச்சுக் கம்பெனிக்குப் பாதியும், ஏகோஜிக்குப் பாதியும் சேர வேண்டும் என்றும், கம்பட்டத்தில் ஏகோஜியின் ஆள் ஒருவர் இருந்து கணக்குகளைச் சரிபார்க்கலாம் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

**சமய நிலை**

சைவம், வைணவம், இசுலாம், கிறித்தவ சமயங்கள் எல்லாவிதமான வழிபாட்டு உரிமைகளுடன் மராட்டியர் ஆட்சியில் நிலவினாலும், சைவ சமயமே மிகச் சிறப்புடன் செழித்தோங்கியது. தஞ்சை மராட்டிய மன்னர்கள் வெளியிட்ட 50 செப்பேடுகளில் 40 செப்பேடுகள் சிவாலயம் தொடர்பான செய்திகளைப் பேசுகின்றன.

அரசர்களும், பாளையக்காரர்களும், முன்னின்று ஆலயத் திருப்பணிகள் செய்தனர். அரசு அலுவலர்கள் ஆங்காங்கு நடைபெற்ற சமயக் கொடைகளுக்கும் விழாவிற்கும், வழிபாட்டிற்கும் முன்னின்று உதவினர். பல்வேறு வணிகர்கள் சாதி மத பேதமின்றித் தங்கள் வாணிகத்திற்கு ஏற்ப மகமை வசூல் செய்தும், பொன்னை அளித்தும், சிவாலயத்திற்கு விழா எடுத்தனர். உழவர்களும் தங்கள் குடும்பத்திற்கு ஏற்பவும், விளைச்சலுக்கு ஏற்பவும் நாணயங்களையும், தானியங்களையும் சிவாலயத்திற்கு அளித்தனர்.

சிதம்பரம், வைத்தீஸ்வரன் கோயில் போன்ற பல ஊர்களில் மடங்கள் இருந்தன. ஒரே ஊரில் பல சாதியாருக்குத் தனித்தனி மடங்கள் இருந்தன. ஆங்காங்குச் சமய தருமம் இனிது நடத்தச் சான்றோர்கள் பலர் இருந்ததாகச் செப்பேடுகள் மூலம் அறிய முடிகிறது.

ஆலயங்களில், நாள் வழிபாடு, வார வழிபாடு, பட்ச வழிபாடு, மாத வழிபாடு ஆகியவையும், ஆண்டுச் சிறப்பு விழாக்களுடன் பல்வேறு பண்டிகைகளும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. வழிபாட்டின்போது அந்தணர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் திரு அமுது படைக்கப்பட்டது. ஏழைகளும், நோயாளிகளும் நாள்தோறும் உணவு பெற்றனர். அன்னதானத்துக்கு எனத் தனியாகச் சத்திரங்களும் அமைக்கப்பட்டன.

# பாளையக்காரர்

தமிழகத்தில் விஜயநகரப் பேரரசின் ஆட்சி நடைபெற்றபோது, 1529-க்கும், 1564-க்கும் இடையில் மதுரை மண்டலத்தை நிர்வகித்தவர் விசுவநாத நாயக்கர். இவரால் தனது மாகாணங்களில் அதிகாரங்களைப் பெற விரும்பிய சிறுகுடித் தலைவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அவரது அமைச்சர் அரியநாத முதலியாருடன் கலந்தாலோசித்து, ஆந்திராவை ஆண்ட காக்கத்தியர் இராச்ச்சியத்தில் நடைமுறையில் இருந்த பாளையக்கார முறையை 1529-இல் ஏற்படுத்தினார். இது இம்முறையின் கீழ் மதுரை மண்டலம் 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. இப்பாளையம் ஒவ்வொன்றும் ஒரு படைநிலை ஆகும். இப்பாளையத்தை நிர்வாகம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட தலைவன் பாளையக்காரர் எனப்பட்டார். ஒவ்வொரு பாளையக்காரரும் ஒரு பிரதேசத்தின் அல்லது பாளையத்தின் உரிமையாளராக கருதப்பட்டார். இந்த பாளையக்காரர்கள், நாயக்கர்களுக்கு தேவை ஏற்படும் போது இராணுவம் மற்றும் இதர உதவிகளை முழு மனதுடன் செய்தனர். பாளையக்காரர்கள் வரிகளை வசூலித்து, தாங்கள் வசூலித்த வரிப்பணத்தில் மூன்றில் ஒரு பங்கினை மதுரை நாயக்கர்களுக்கும், அடுத்த மூன்றில் ஒரு பங்கினை இராணுவ செலவிற்கும் கொடுத்துவிட்டு மீதியை அவர்கள் சொந்த பாளையக்காரச் செலவிற்கு வைத்துக்கொண்டனர்.

"பாலாமு” என்கிற தெலுங்கு மொழிச் சொல்லிலிருந்து பாளையம் என்ற சொல் உருவானது. பாலாமு என்றால் படை முகாம் என்று பொருள்படும். இம்முறையின் கீழ் மதுரை மண்டலம் 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. இப்பாளையம் ஒவ்வொன்றும் ஒரு படைநிலை ஆகும்.

**கடமையும், அதிகாரமும்**

மண்டல அரசு, ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியைப் பாளையக்காரர்களின் நிர்வாகப் பொறுப்பில் விடும். இதற்குப் பதிலாகப் பாளையக்காரர்கள் அரசின் பாதுகாப்புக்காகத் தேவையான இராணுவ வளங்களைக் கொடுக்கவேண்டும். பாளையப்பட்டுகளுக்குள் அடங்கும் நிலங்களுள் ஒருபகுதியைத் தங்கள் சொந்தப் பயன்பாட்டுக்கு வைத்துக் கொள்ளும் பாளையக்காரர்கள், மிகுதியை, இராணுவ வளங்களைத் திரட்ட உதவக்கூடிய செல்வாக்குள்ள குடிமக்களில் சிலருக்குப் பிரித்து வழங்கினர்.

**பாளையக்காரர்களின் நிர்வாகம்**

தங்களுடைய நிர்வாகத்துக்குள் அடங்கிய பகுதியில் ஓரளவு சுயமான அதிகாரத்துடன்கூடிய ஆட்சியதிகாரம் பாளையக்காரர்களுக்கு இருந்தது. பாளையப்பட்டுகளுக்கெனத் தனியான நிர்வாக அமைப்பும் இருந்தது. இந்த அமைப்பிலே பாளையக்காரர்களின் கீழ் அமைச்சராகவும், படைத் தளபதியாகவும் செயற்படக்கூடிய தளவாய் ஒருவரும், பாளையப்பட்டுக்கு மேலுள்ள அரசு தொடர்பான விடயங்களைக் கவனிக்கத் தானாபதி ஒருவரும் இருந்தனர்.

**உரிமைகள்**

பாளையங்களின் பாதுகாப்பு, நிருவாகம், சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு, வரி வசூலிப்பு போன்ற விடயங்களில் பாளையக்காரர்களுக்கு உரிமைகள் இருந்தன. படை திரட்டி அவற்றைப் பாராமரிக்கவும், பாளயத்தின் பாதுகாப்புக்காகக் கோட்டைகளைக் கட்டிக்கொள்ளவும், நீதி விசாரணைகளை நடத்தித் தீர்ப்பு மற்றும் தண்டனைகள் வழங்கவும் பாளையக்காரர் அதிகாரம் பெற்றிருந்தனர். தங்களுடைய அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் குடிமக்களிடம் வரி அறவிடும் உரிமை இவர்களுக்கு இருந்தது. இவ்வாறு அறவிடப்படும் வரி, மன்னருக்கான கொடுப்பனவு, பாளையக்காரர்களின் சொந்தச் செலவு மற்றும் பாளையத்து நிர்வாகச் செலவு என்பவற்றுக்காகச் சமமாகப் பங்கிடப்பட்டது.

**பாளையக்காரரின் பங்களிப்புகள்**

முழு நாட்டின் பாதுகாப்புக்காகவும், வலிமைப் பெருக்கத்துக்காகவும், வேறு பல காரணங்களுக்காகவும், நாட்டின் மன்னர்கள் ஈடுபடும் போர்களில் உதவியாக நின்று போர்புரிந்து வெற்றி தோல்விகளைப் பாளையக்காரர்கள் தீர்மானித்துள்ளார்கள். அரசுரிமைப் போட்டி, உள்நாட்டுக் கலகங்கள் போன்றவற்றிலும் பாளையக்காரர்களின் பங்கு பல சந்தர்ப்பங்களில் முக்கியமானதாக இருந்ததுண்டு. பிற்காலங்களில் மன்னர்கள் வெள்ளையர் ஆதிக்கங்களுக்குப் பணிந்த பின்னரும், பாளையக்காரர்கள் அவர்களை எதிர்த்து நின்ற வரலாறுகளும் உண்டு.

# நவாப்புகள்

ஆற்காடு நவாப்புகள் (Arcot Nawab) என அழைக்கப்படுபவர்கள் 1690 முதல் 1801 வரை தென்னிந்திய கருநாடக பகுதிகளை ஆண்ட மன்னர்கள் ஆவர். இவர்கள் தலைநகரம் இன்றைய சென்னை அருகில் உள்ள ஆற்காடு ஆகும். தமிழக வரலாற்றில் மிக முக்கியமான இவர்கள் பொதுவாக கருநாடக நவாப்புகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஆட்சியின் பொழுதுதான் ஆங்கிலேயேர்கள் மொகலாய ஆட்சியாளர்கள் உதவியுடன் இந்தியாவில் காலூன்ற ஆரம்பித்தனர்.

ஆற்காடு நவாப்புகள் கலிபா உமர் இப்னு அல் கத்தாப் அவர்களின் வழிவந்தவர்கள் ஆவர். இவர்கள் 1692 ஆம் ஆண்டு மொகலாய சக்கரவர்த்தி அவுரங்கசீப்பால் கர்நாடக பிரதேசம் பகுதிகளில் வரிவசூல் செய்ய நியமிக்கப்பட்டனர். இவ்வாறு நியமிக்கப்பட்ட முதல் நவாப் சுல்பிக்கார் அலி என்பவராவார். இவர் மராத்திய, விஜயநகரப் பேரரசுகளை முறியடித்தார். மேலும் தனது ஆட்சிப்பகுதியை கிருஷ்ணா ஆறு வரை பரப்பினார். பின்பு வந்த நவாப் தோஸ்த் அலி கான் (1732–1740) என்பவர் தனது அரசை 1736 இல் மதுரை வரையில் விரிவுபடுத்தினார்.

இதன் பிறகு 1749 ஆம் ஆண்டு முகமது அலி கான் வாலாஜா என்பவர் ஆட்சிக்கு வந்தார். இவரது ஆட்சி மிகவும் அமைதியாகவும், சமய சகிப்புதன்மை உள்ளதாகவும் விளங்கியது. இவர் தனது நாட்டின் அனேகமான பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டதோடு, அங்கு இருந்த அனைத்து கோவில்கள், மசுதிகள் மற்றும் தேவாலயங்களுக்கு நன்கொடைகளையும் அளித்தார். இன்றைய திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் நகரில் உள்ள ஸ்ரீரங்கநாதர் ஆலயமும் அவற்றில் ஒன்றாகும். இவர் 1765 இல் முகலாயப் பேரரசிற்கு கப்பம் கட்டுவதை மறுத்து, நவாப் ஆட்சியை சுதந்திர அரசாக அறிவித்தார்.

இதன் பிறகு இவர் தன்னை காத்துக்கொள்ளும் பொருட்டு பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி உடன் நட்புறவை மேற்கொண்டார். தனக்கு கீழ் உள்ள சமஸ்தானங்களை கட்டுப்படுத்த இவர் கம்பனி படைகளை உபயோகப்படுத்தினார். மேலும் இவர் பிரெஞ்சு – ஹைதர் அலி கூட்டு படையை எதிர்க்க ஆங்கிலேயற்கு ஆதரவாக போரிட்டார். இதன் காரணமாக இந்திய சுதந்திர உணர்விற்கு எதிரானவர் என்ற தோற்றத்தைப் பெற்றதோடு தனது அரசாட்சியின் பெரும்பகுதியை கிழக்கிந்தியக் கம்பனியிடம் இழந்தார்.

இதன் பிறகு பதின்மூன்றாவது நவாபாக ஆட்சிக்கு வந்த குலாம் முகம்மது கவுஸ் காண் ( 1825–1855 ) தனக்கு பிறகு வாரிசு இல்லாமல் இறந்தார். இதனால் அவகாசியிலிக் கொள்கையின் படி, கர்நாடக பிரதேசம், ஆங்கிலேய அரசின் கீழ் சென்றது. இதன் பிறகு 1867 இல் குலாம் முகம்மது கவுஸ் கானின் சிறிய தந்தை ஆஸிம் ஜா, பிரித்தானிய மகாராணி விக்டோரியாவிடம் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி நவாப் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் வரி வசூல் செய்யும் உரிமையை ஆங்கிலேயர் பெற்றனர். அதற்கு பகரமாக வரிவசூலில் ஒரு பகுதியை ஓய்வுதியமாக ஆஸிம் ஜா பெற்றார். மேலும் ஆர்காடு இளவரசர் என்றும் அங்கிகரிக்கப்பட்டார்.

இவரது பரம்பரையில் வந்தவர்கள் இன்றும் சென்னை நகரில் ஆற்காடு இளவரசர் என்ற பட்டத்துடன் வாழ்ந்து வருகின்றனர். சுதந்திர இந்தியாவும் இவர்களது பட்டத்தை அங்கீகரித்து, அரச குடும்பத்தினருக்கான ஓய்வுதியத்தை அளித்து வருகின்றது. இவர்களில் நடப்பு கடைசி ஆற்காடு இளவரசரான முகம்மது அப்துல் அலி ஆஸிம் ஜா ஜுலை 1994 இல் பட்டத்துக்கு வந்தார்.

**நவாபுகளின் ஆட்சியின் முக்கிய அம்சங்கள்**

பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகத்தின் முக்கிய ஆட்சியாளர் களாக விளங்கியவர்கள் ஆற்காட்டு நவாபுகள் ஆவர். இவர்கள் தமிழகத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் தங்கள் மேலாண்மையைச் செலுத்தினர். ஆற்காட்டைத் தலைநகராகக் கொண்டிருந்த நவாபுகள் 1710-ம் ஆண்டு முதல் 1801-ம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர். இக்காலத்தில் நவாபுகள் போர்களில் பெரிதும் ஈடுபட்டனர். ஆளப்பட்டவர்களின் நலன்களை அலட்சியம் செய்தனர். சீரான வருவாய் நிர்வாகத்தையோ அல்லது நீதி நிர்வாகத்தையோ செயல்முறைப்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

**ஆட்சி முறை**

முகலாயப் பேரரசரின் கட்டுப்பாட்டின் கீழ் ஐதராபாத்தில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு நிஜாம் என்று பெயர். இவருக்குக் கட்டுப்பட்டவராகவே ஆற்காட்டு நவாப் இருந்தார். பாலாற்றின் கரையில் அமைந்துள்ள ஆற்காடு நவாபின் தலைநகராகும். இவர் தனது ஆட்சிப் பரப்பை ஆற்காடு, திருச்சிராப்பள்ளி என்ற இரு சுபாக்களாகப் பிரித்திருந்தார். ஆற்காடு சுபா நெல்லூர், செங்கல்பட்டு, ஆற்காடு ஆகிய மாவட்டங்களையும், திருச்சி சுபா திருநெல்வேலி, திருச்சி ஆகிய

மாவட்டங்களையும் உள்ளடக்கி இருந்தது. ஒவ்வொரு சுபாவும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. மாவட்டங்கள் பர்கானாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

நவாபின் ஆட்சித் துறையில் கணுங்கோ , முஸ்தாபி, பேஷ்கார், காஜி, பௌஜ்தார், அமுல்தார் போன்ற அதிகாரிகள் இருந்தனர். இதில் அமுல்தார் வருவாய் நிர்வாகத்திற்கு தலைமை வகித்தார். இராணுவ நிறுவனத்தின் தலைமையை பௌஜ்தார் பெற்றிருந்தார். அமுல்தார் வருவாயை வசூலிக்கும் சிர்க்காருக்கும், வரிகொடுக்கும் மக்களுக்கும் இடையே மத்தியஸ்தர் ஆவார். வரி வசூலை செயல்முறைப்படுத்துவது மட்டுமின்றி சில வேளைகளில் படைகள் மீதான கட்டுப்பாட்டையும் பெற்றிருந்தார். இவர் தனது கச்சேரி அல்லது அலுவலகத்தை மாநில தலைமையகத்தில் கொண்டிருந்தார்.

நவாப் பரம்பரை உரிமைப்படியே அதிகாரத்தைப் பெற்றார். அவர் வரைமுறையற்ற அதிகாரத்தைப் பெற்றிருந்தார். நாட்டின் கொள்கையை வகுக்க கலந்தாலோசிக்கப்படுகிற ஆலோசனைக் குழு நவாபுக்கு உதவியது. நவாபின் அதிகாரிகளும் அதிக அதிகாரம் பெற்றிருந்தனர். மதுரை ஆளுநரான மாபுஸ்கான், சிவில் ராணுவ அதிகாரங்களைப் பெற்றிருந்தார். இத்தகைய வாய்ப்புகள் நாட்டில் ஏதேச்சதிகாரப் போக்கிற்கு வழிவகுத்தன. எவ்வாறாயினும் நிர்வாக அமைப்பின் அடித்தளத்தில் பிரதானிகளையும் குழுவையும் கொண்ட கிராம அமைப்புகள் நாட்டின் ஜனநாயக முறைகளைக் காத்து வந்தன.

**கிராம நிர்வாக முறை**

மக்கள் குடியிருப்புப் பகுதியைக் கொண்ட கிராமமானது, வார்டுகளையும், விவசாய நிலங்களையும், தரிசு நிலங்களையும், நீரோடை களையும், கோவில்களையும் கொண்டிருக்கும் விதத்தில் அமைக்கப் பட்டது. குடியிருப்புப் பகுதியில் கிராம மக்கள் வீடுகளைக் கட்டினர். இந்த கிராமமே ஆட்சித் துறையின் மிகச் சிறிய அலகாகும். ஒவ்வொரு கிராமமும் ஒரு நாட்டாண்மைக்காரரையும், கீழ்நிலை அதிகாரிகளையும், தலக்குழுவையும் கொண்டிருந்தது. நாட்டாண்மைக்காரர் பதவி பாரம்பரியப்படி அமைந்திருந்தது. அவர் கிராமத்திற்கும் அரசுக்கும் இடையே நடுவராகப் பணியாற்றினார். இந்த நாட்டாண்மைக்காரர் நவாப் ஆட்சிக் காலத்தில் பொட்டேல் என்று அழைக்கப்பட்டார்.

கிராம கணக்கரான கர்ணம் பொட்டேலுக்கு உதவியாக இருந்தார். இரு பிரிவைச் சேர்ந்த கர்ணம்கள் இருந்தனர். குடிகர்ணம் என்பவர்கள்

கிராம அதிகாரிகளாகவும், சிர்க்கார் கர்ணம் என்பவர்கள் அரசு ஊழியர் களாகவும் இருந்தனர். ஒருவர் பெற்றிருக்கும் நிலம் பற்றிய விபரங்கள் அடங்கிய ரோஷம் அல்லது பதிவேட்டை கர்ணம் வைத்திருந்தார். வேளாண்மை, வருவாய், கிராமத்தவர் மேற்கொண்ட வணிக விவகாரங்கள் பற்றிய செய்திகளைக் கர்ணம் பதிவு செய்தார். அத்துடன் அரசு ஒழுங்கு முறைகள் பற்றிய விவரங்களை கிராமத்தவருக்கு அவ்வப்போது தெரிவித்து வந்தார்.

காவல்காரர்கள் அல்லது தலையாரிகள் போலீஸ் பணிகளைச் செய்தனர். இரவில் காவல் புரிந்து மக்கள் வருவது போவது பற்றி எழுதி வைத்து பொட்டேலிடம் தெரிவித்தனர். கொள்ளையடித்தோரைப் பிடித்து பொட்டேலிடம் ஒப்படைத்தனர். ஆனால் இப்படிப்பட்ட இந்த காவல் முறையானது பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் அழிந்து போனது. வழக்குகளைத் தீர்க்க பொட்டேல் ஒரு பஞ்சாயத்தைக் கூட்டினார். இதில் கிராமத்தில் உள்ள பல்வேறு இனத்தவர்களும் இடம் பெற்றனர். இந்த பஞ்சாயத்தார் முறையீடுகளைக் கேட்டு அதனை விரிவாக விசாரித்து தண்டனை வழங்கினர். தல வழக்குகளை நன்றாகத் தெரிந்து கொண்டு கிராமத்தின் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டபஞ்சாயத்தானது சிறிய வழக்குகளைத் தீர்ப்பதற்குத் தக்கவகையில் தகுதி வாய்ந்ததாக இருந்தது.

போலீஸ் நிதி நிறுவனங்களைத் தவிர மேலும் அநேக ஊழியர் களும் இருந்தனர். கிராம ஷ்ராப் (Shrofi) அனைத்து வசூலையும் வகைப்படுத்தினார். கிராம சோதிடர் நல்ல நாட்களைக் குறிப்பிட்டார். இதோடு புரோகிதர்களும், மருத்துவர்களும், நடன ஆசிரியர்களும், நாட்டிய சிறுமிகளும், தாரை வாசிப்போரும், நாவிதர்களும், தோட்டிகளும் இருந்தனர். தல ஊழியர்களுக்கு ஒரே சீரான ஊதியம் வழங்கும் முறை நடைமுறையில் இல்லை. நிலமாகவோ, பணமாகவோ அல்லது தானியமாகவோ ஊதியம் வழங்கப்பட்டது.

**வருவாய் நிர்வாகம்**

நவாப் ஆட்சியில் பொது வருவாய்க்கான மூலங்களாக விளங்கியவை நில வருவாய், கப்பம், பரிசுகள், சர்வாதீன உரிமைகள் ஆகியவையாகும். நில வருவாய் முக்கியமானதாகவும், நிரந்தர வருவாயாகவும் இருந்தது. தானியங்கள் மீதான வரி, குத்தகைப் பணம், புன்செய் நிலவரி, கரும்பு வரி, வெற்றிலை, வாழை போன்றவை பயிரிட வரி, காட்டு நிலங்களில் கால்நடைகளை மேயவிட வரி, வீட்டுவரி போன்றவை முக்கிய வரியாக அமைந்தது.

நவாப் ஆட்சி புரியும் பகுதியிலுள்ள மாவட்டங்களில் மறைமுகமாகவே அல்லது நேரடியாகவோ வசூலிக்கப்பட்டது. முதல் முறையில் குடிக்கூலியாளர் வரியை வசூலித்து ஒரு நிலையான தொகையைச் செலுத்தினார். இரண்டாவது முறையில் அமுல்தார் வரியை வசூலித்து அதனை கஜானாவில் செலுத்தினார். நெல் சாகுபடி செய்தவுடன் அதன் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள், விஸ்தீரணம் ஆகியவற்றின் அடிப்படையில் வரி மதிப்பீடு பாரபட்சமில்லாமல் சரியாக அமைந்தது. மேலும் அரசின் தேவைகளின் அடிப்படையில் வரி மதிப்பீடு அமைந்திருந்தது. அறுவடை செய்த பின்னர் தானியங்களை விற்பதற்கு குடியானவர்கள் அனுமதிக்கப்பட்டனர். வரி விதிப்பில் சலுகை வேண்டும் என்று குத்தகைதாரர்கள் கோரிக்கை விடுத்தால் அது பரிசீலிக்கப்பட்டது.

நிலத்தின் மீதான வரி மதிப்பீட்டு முறையானது காலத்திற்குக் காலம் வேறுபட்டது. முகமதிய சட்டம் விளைச்சலில் பாதியை பங்காகப் பெற்றுக் கொள்ளவும், நம்பிக்கையற்ற பிற மதத் தலைவரிடமிருந்து அதற்கு மேலும் பெற்றுக் கொள்ளவும் மன்னர்களுக்கு உரிமை வழங்கியது. என்றாலும் பதினெட்டாம் நூற்றாண்டு கர்நாடக நிர்வாகத்தில் சில வேளைகளில் தான் இம்முறையானது பயன் தரும் விதத்தில் பயன்படுத்தப்பட்டது. விளைச்சலில் சரிபாதியை பங்கிடுவதுதான் கொள்கையாக இருந்தது. அறுவடைக்காக ஐந்து சதவீதத்தைக் கழித்த பின்னர் இம்முறையானது பின்பற்றப்பட்டது.

வரிகள் எதேச்சதிகாரமான முறையில் வசூலிக்கப்பட்டதால் மக்கள் துன்பத்திற்குள்ளாயினர். வரிகளை வசூலிப்பதில் ஈடுபட்ட வருவாய் ஊழியர்கள் செல்வாக்கான மக்களுக்கு சலுகைகள் வழங்கி ஏழைகள் மீதான வரியைக் கூட்டினர். அரசு ஆணைகளைத் தவறாக நடைமுறைப்படுத்தினர். ஒவ்வொரு பொது அலுவலகத்திலும் மக்கள் மீது சவுக்குகளும், சாட்டைகளும், விரல் திருகுகளும் மற்றும் கடும் சோதனைகளும் பயன்படுத்தப்பட்டன. குடியானவர்களும், உழவர்களும், உற்பத்தியாளர்களும், கைவினைஞரும், பிற மக்களும் கொடிய முறையில் வரிகளை வசூலிக்கும் அதிகாரிகளின் தயவில் வாழ்ந்தனர்.

வரி விதிப்பதிலும், வரி வசூலிப்பதிலும் காணப்பட்ட முறை கேடுகள் ஊழல்கள் காரணமாக எதிர்ப்பு ஏற்பட்டது. மக்களின் எதிர்ப்பானது அமைதியானதாகவும், ஆத்திரம் மிகுந்ததாகவும் இருந்தது. எனவே பயிரிடுவதைப் புறக்கணித்து வரி கொடுப்பதில் ஏமாற்றுவதையும், மோசடி செய்வதையும் பின்பற்றினர். இதன் விளைவாக நாடு வருவாயில் பெரும் பகுதியை இழந்தது. சில நேரங்களில் மக்கள் தங்கள் எதிர்ப்பை மிகக் கொடுமைமிக்கதாக வெளிப்படுத்தினர்.

**நீதி நிர்வாகம்**

ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் நீதிமன்றங்கள் இருந்தன. அதில் முகமதியர்களுக்கிடையிலான அனைத்து வழக்குகளையும் காஸி விசாரித்து தீர்ப்பு கூறினார். இந்துக்களுக்கிடையிலான வழக்குகளில் பிரதானிகளும், அமுல்தாரர்களும் நீதி வழங்கினர். ஒவ்வொரு மாவட்டத்திலும் அமுல்தாரின் உறவினர்களும் அவரைச் சார்ந்தவர்களுமே ஏராளமானவர்கள் இருந்ததால் அவர்களின் நலன்களே அவரிடம் வந்த வழக்குகளில் பலவற்றில் சம்பந்தப்பட்டிருந்தன. நவாப் நிலப் பகுதிகளில் பௌஜ்தாரும் அவரது உதவியாளர்களும் கிரிமினல் வழக்குகளைத் தீர்த்தனர். மாஜிஸ்டிரேட்டின் அதிகாரங்களையும், செசன்ஸ் நீதிபதியின் அதிகாரங்களையும், பெருங்குற்ற வழக்குகளையும் விசாரித்து குற்றவாளி களுக்குத் தண்டனை வழங்கினார். அவரது தீர்ப்பு பற்றி நவாபுக்கு முறையீடு செய்யலாம். அவரது தீர்ப்பு நவாபின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

தங்களது வழக்குகளை நீதிமன்ற அதிகாரிகளிடம் விளக்குவதற்காக துபாஷ் என்றழைக்கப்பட்ட விளக்குநர்களை நியமிக்கும் உரிமையை வழக்கில் ஈடுபட்டிருந்தவர்கள் பெற்றிருந்தனர். கிரிமினல் குற்றங்களைப் பொதுவாக அபராதங்கள் வழியாக ஈடு செய்தனர். ஆனால் சொத்து சம்பந்தமான வழக்குகள் தீர்ப்புகளால் முறையாக தீர்க்கப்பட்டது. சிறைத் தண்டனை பொதுவானது. சில வேளைகளில் மரண தண்டனை வழங்கப் பட்டது.

நவாப் ஆட்சிக் காலத்தில் நீதி நிர்வாகத்தில் ஊழல் காணப்பட்டது. அதிகாரத் துஷ்பிரயோகங்களும் இருந்தன. இதனால் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற கொள்கையானது புறக்கணிக்கப்பட்டது. எதேச்சதிகாரக் கொடுமையிலிருந்து ஏழைகளுக்கு பாதுகாப்பு மறுக்கப் பட்டது. மக்கள் உரிமைகளுக்கு எத்தகைய மதிப்பும் இல்லாத வேளையில் நீதி நிர்வாக முறையானது வருவாயோடு பிணைக்கப்பட்டிருந்தது. சட்டத்தில் திறமை பெற்றிராதவர்களும் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். அமைச்சர்கள் நீதிமன்றத் தீர்ப்புகளில் தங்கள் செல்வாக்கைச் செலுத்தினர். 1784-ல் இஸ்லாமிய சட்ட முறைப்படி ஒரு நீதிபதி சரியாக நீதி வழங்கிய போது அவர் நவாபின் அதிருப்தியைச் சம்பாதித்ததுடன் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார். நீதித்துறையில் காணப்பட்ட இத்தகைய ஊழல்களால் மக்கள் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

**சமுதாய நிலை**

நவாபுகளின் ஆட்சிக் காலத்திலும் சமுதாயத்தில் சாதிப் பாகுபாடுகள் தொடர்ந்து காணப்பட்டது. அத்துடன் பல புதிய சாதிகளும் தோன்றின. தமிழகத்தில் நவாபுகளின் காலத்தில் பல முஸ்லீம்கள் வந்து நிரந்தரமாகக் குடியேறியதால் அவர்களது பழக்கவழக்கங்கள் தமிழ் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தின. இங்குள்ள மொழிகள் கலந்த உருது மொழியைப் பேசினர். அரசுப் பதவிகள் பலவும் உருது பெயர் பெற்றன. நகர்ப்புறங்களிலும், கடலோரப் பகுதிகளிலும் அந்நிய நாட்டவரின் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. இவர்களது வாழ்க்கை முறை மேம்பட்டும், கிராம மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து மாறுபட்டும் காணப்பட்டது.

சமுதாயத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இயேசு சபையினரின் மதப் பிரச்சாரத்தால் மேலும் மேலும் மக்கள் கிறிஸ்தவர் களாயினர். கிறிஸ்தவர்களின் பழக்க வழக்கங்களும் மற்ற மக்களிடமிருந்து சிறிது மாறுபட ஆரம்பித்தன. சமுதாயத்தில் குறிப்பிட்ட மொழி பேசுவோர் ஒவ்வொரு இடத்திலும் மொத்தமாக வாழ்ந்தனர். சில இடங்களில் மாற்று மொழி பேசுவோர் கலந்தும் வாழ்ந்தனர்.

நவாப் ஆட்சிக் காலத்தில் சமுதாயத்தில் பிராமணர்களின் ஆதிக்கம் தொடர்ந்து மேலோங்கிய நிலையிலேயே இருந்தது. சமுதாயத்தில் பல நம்பிக்கைகளும் நடைமுறைகளும் தோன்றின. மக்களிடம் மத சகிப்புத் தன்மை காணப்பட்டது. கலப்புத் திருமணங்கள் தடை செய்யப் பட்டிருந்தன. பல ஐரோப்பியக் கம்பெனிகள் வேலைக்காக ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளைக் கொண்டு வந்து சேர்த்தனர். பொதுவாக ஐரோப்பியர்களின் பழக்க வழக்கங்களும், முஸ்லீம்களின் சமுதாயப் பழக்கங்களும் தமிழக சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தின.

பொருளாதார நிலை

நவாபுகளின் காலத்தில் தமிழகத்தில் வேளாண்மையே சாதாரண மக்களின் முக்கியமான தொழிலாக இருந்தது. பாளையக்காரர்கள் மொத்தமாக நிலங்களின் மீது உரிமை அளிக்கப்பட்டனர். சில கிராமங்களில் மக்கள் விவசாய நிலங்களை தங்களுக்குள் பங்கீடு செய்து கொண்டனர். அத்தகைய கிராமங்களில் வரியைச் செலுத்தும் பொறுப்பை அனைவரும் பகிர்ந்து கொண்டனர். பருவம் ஆரம்பித்த போது விவசாயிகள் ஒன்றுகூடி குளத்திலுள்ள தண்ணீர் அளவை நிர்ணயித்து ஒருவர் பெற்றிருக்கும் நிலத்திற்கு ஏற்ப பகிர்ந்து கொண்டனர்.

பொதுவாக கிராமம் காடுகளால் சூழப்பட்டிருந்தது. அவை எதிரிகளுக்கு அரண்களாகவும், விறகுகள் கொடுப்பனவாகவும், மேய்ச்சல் நிலங்களாகவும் பயன்பட்டன. கோவில்கள் பண்பாட்டின் உறைவிடமாகத் திகழ்ந்தன. அது காலையிலும் மாலையிலும் வழிபடும் இடமாகவும், அனைத்து ஆபத்துகளிலிருந்து காக்கவும், உணவளிக்கும் இடமாகவும் விளங்கியது. நவாபுகள் காலத்தில் அமுல்தார்கள் எனப்பட்ட வருவாய் அதிகாரிகள் வரிவசூல் செய்தனர். இவர்கள் விவசாயிகளை ஏமாற்றி துன்புறுத்தினர். இதனால் விவசாயிகள் பெரிதும் அல்லல்பட்டனர். வருவாய் ஆட்சித்துறை ஊழல் நிறைந்ததாகவும், மக்கள் நலனுக்கு எதிராகவும் இருந்தது.

நவாபுகள் காலத்தில் பாரம்பரியமாகச் செயல்பட்டு வந்த தொழில்கள் நடைபெற்று வந்தன. அந்நிய வாணிபத்தில் போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் பிரெஞ்சுக் காரர்கள் மேலாதிக்கம் செலுத்தினர். இவர்களது வருகை காரணமாக பல உள்நாட்டுத் தொழில்கள் நசிய ஆரம்பித்தன. ஐரோப்பிய வாணிபர்களின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டே வந்தது. இந்தக் காலத்தில் சென்னை நகர் வளரத் தொடங்கியது.

நவாப் ஆட்சிக் காலத்தில் பஞ்சமும் கொள்ளை நோயும் நாட்டைத் தாக்கின. 1732, 1762-68, 1784-85, 1788-99 ஆகிய ஆண்டுகளில் பெரும் பஞ்சம் நாட்டைத் தாக்கியது. பருவமழை தவறியதாலும், போர்களினாலும் பஞ்சங்கள் தோன்றின. குழந்தைகள், முதியோர்கள், இளைஞர்கள் செத்து மடிந்தனர். பசியின் கோரத்தினால் மக்கள் எலும்பும், தோலுமாகக் காட்சியளித்தனர். குடும்பம் குடும்பமாக மக்கள் தெருக்களில் செத்து மடிந்தனர். இதேபோல கொள்ளை நோயும் பேரழிவை ஏற்படுத்தியது. நவாபின் அரசாங்கம் இவைகளைப் பற்றிக் கவலைப் படவும் இல்லை. மக்களுக்கு உதவி செய்ய முன்வரவும் இல்லை. இவ்வாறு ஏற்பட்ட பஞ்சங்களும், கொள்ளை நோயும் பொருளாதார நிலையை வெகுவாகப் பாதித்தன.